## "ஒன்டேரியோ வாய்ப்புக்கள்"(Opportunities Ontario):
## மாகாண நியமனதாரர் திட்டம்

### மேல் நோட்டம்:

ஒன்டேரியோவின் தொழில் சந்தைக்கு அரிய தகமைகளையும், அறிவாற்றலையும் கொண்டு வரும் குடிபெயர்ந்தோர், மாகாணத்தின் பொருளாதாரத்தை வளர்ப்பதோடு, ஒன்டேரியோவை உலகின் சிறந்த தெரிவிடமாக்கவும் உதவுகின்றனர். சர்வதேச அளவில் பயிற்சி பெற்ற தனி நபர்களை, சர்வதேச மாணவர் உட்பட, வேலையில் சேர்த்துக் கொள்ள ஒன்டேரியோ வேலைவழங்குவோருக்கு இத்திட்டம் வழிவகுக்கிறது. தமக்குத் தேவையான தகமை பெற்ற வேலையாட்களைத் தேடிக்கொள்ளச் சிரமப் படும் வேலை வழங்குவோருக்கு இத்திட்டம் உதவிகரமாக இருக்கும்.

கூட்டுப்பொது அரசும், மாகாண அரசும் குடிவரவைப் பொறுத்த வரையில் ஒரு பங்கை வகிக்கின்றன. "ஒன்டேரியோ வாய்ப்புக்கள்" மூலம் ஒன்டேரியோ அரசு, கூட்டுப்பொது அரசுக்கு தனி நபர்களை தெரிவு செய்து நியமனம் செய்கிறது. கனடாவிலுள்ள நிரந்தர வதிவுரிமைக்கான அனைத்து விசாக்களும் கனேடிய பிரஜாவுரிமை சக குடிவரவின் மூலம் செயற்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்படுகிறது.

இந்த ஆவணம் ஆங்கிலம், பிரெஞ்சு உட்பட 25 பல்வேறு மொழிகளில் கிடைக்கும். "ஒன்டேரியோ வாய்ப்புக்கள்" சம்பந்தமான தகவல்களின் துல்லியத்தை நிச்சயப்படுத்த ஒவ்வொரு முயற்சியும் எடுக்கப்பட்டாலும் வெளியீட்டின் பின் சில தகவல்கள் மாறியிருக்கக் கூடும். "ஒன்டேரியோ வாய்ப்புக்கள்" பற்றி மேலும் அறிய, பிரஜாவுரிமை சக குடிவரவு அமைச்சின் (MCI), www.OntarioImmigration.ca என்ற இணையத்தளத்தை பார்வையிட்டு மேலும் மிகப்புதிய தகவல்களும், தகுதியுடமை மற்றும் விண்ணப்பச் செயற்தொடர் போன்றவற்றையும் அறிந்து கொள்ளலாம்.

"ஒன்டேரியோ வாய்ப்புக்கள்" இன் பத்திரங்கள் மற்றும் சேவைகள், MCI இணையத்தளத்தில் உள்ள விபரங்கள் உட்பட, ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் மட்டுமே கிடைக்கப்பெறும்.

### அடிப்படை உண்மைகள்:

- அங்கீகரிக்கப்பட்ட நியமன விண்ணப்பதாரருக்கு மாகாண நியமன சான்றிதழ் வழங்கப்படும். 1000 தனிநபர்கயையும் அவர்கள் குடும்ப அங்கத்தினரையும் "ஒன்டேரியோ வாய்ப்புக்கள்" திட்டத்தினால் வருடாந்தம் நியமிக்க முடியும்.
- "ஒன்டேரியோ வாய்ப்புக்கள்" வேலை வழங்குவோரினால் ஊக்குவிக்கப்படுகிறது. அதாவது, தனிநபர் என்ற வகையில் உங்கள் வேலை வழங்குவோரின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின்பே நீங்கள் விண்ணப்பிக்க முடியும். அங்கீகரிக்கப்பட்ட பின் ஒன்டேரியோ மாகாணம் நியமனதாரர் விண்ணப்பக் கோவையை உங்கள் வேலை வழங்குவோருக்கு அனுப்பி வைக்கும்.
- திட்டத் தகமைக்கேற்ப, கிடைக்கப்பெற்ற வரிசைக் கிரமத்தின் படி விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும். புதவிகளின் எண்ணிக்கை வரையறைக்குட்பட்டதாக இருப்பதால், தமக்குத் தேவையான இடங்களைப் பெற்றுக்கொள்ள வேலை வழங்குவோர் முன்கூட்டியே விண்ணப்பிக்க ஊக்கப்படுத்தப் படுகின்றனர்.
- ஒன்டேரியோ வாய்புக்களானது, பின்வரும் இரு வகையறாக்களைக் கொண்டது:

## 1. “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” - பொது வகையறா

- வெளிநாட்டு ஊழியர்களுக்கு நிரந்தர முழு-நேர வேலை அளிக்கும் தகுதி பெற்ற வேலைவழங்குவோருக்கு இந்தப் பொது வகையறா தயாராக இருக்கிறது. நியமனப் பதவிகளுக்கு உரிய முன் பரிசீலனையும், அங்கீகாரமும் பெறுவதற்கு “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” இற்கு வேலை வழங்குவோர் தமது விண்ணப்பங்களை அனுப்புவார்கள்.
- வேலைவழங்குவோர் தமக்குத் தேவையான தகமைபெற்ற ஊழியரைத் தெரிவு செய்ய “ஒன்டேரியோ வாய்ப்புகள்” அனுமதிக்கிறது. நடத்துனர், தொழில் நிபுணத்துவம் பெற்றவர்கள், தொழில்துறைத் தகமை பெற்ற பதவிகள் போன்றவை மட்டுமே கருத்தில் கொள்ளப்படும்.
- வேலைவழங்குவோர் வெளிநாட்டு ஊழியர் அல்லது சர்வதேச மாணவர்களை, அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு, அவர்கள் வெளிநாட்டில் இருப்பினும் சேர்த்துக் கொள்ளலாம் (வெளிநாட்டு தற்காலிக ஊழியராகவோ, மாணவர் அல்லது விருந்தினராகவோ இருக்கலாம்). சகல, எதிர்கால நியமனதாரரும், கனடாவில் விருந்தினராகவோ, வதிவுரிமையுடையவராகவோ இருப்பினும், தமது விண்ணப்பப் படிவங்களுடன் தமது குடிவரவு நிலை பற்றிய அத்தாட்சியை இணைக்க வேண்டும்.
- முறைப்படுத்தப்பட்ட தொழில் அல்லது தொழில் துறையில் ஒரு பதவிக்கு விண்ணப்பிப்பதாக இருப்பின், பிறநாட்டு ஊழியர்கள் குறைந்தது இரண்டு வருட அனுபவம் அல்லது ஒன்டேரியோவில் முறையான பதிவுடன் இருக்கவேண்டும்.
- பொது வகையறா கூட, முதலீட்டாளர்கள் அதி-முக்கிய ஊழியர்களை வரவழைப்பதை அனுமதிக்கிறது. தகுதி பெறுவதற்கு, மிகக்கணிசமான முதலீடு ஒன்டேரியோவுக்கு அவசியம். ஒன்டேரியோ வாசிகளுக்கு வேலை உருவாக்கி அவை ஒன்டேரியோ அரச அமைச்சினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். நீங்கள் ஒரு முதலீட்டாளரானால், மேலும் விரிவான தகவல்கள் வேண்டுமானால். தயவு செய்து www.OntarioImmigration.ca என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

## 2. “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” - சர்வதேச மாணவர் வகையறா

- பொதுநிதி ஆதார இயக்கம் கொண்ட கனேடிய உயர்தரக் கல்விநிலையங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களிலிருந்து புதிய பட்டதாரிகளை சர்வதேச மாணவர் வகையறா நோக்கி உள்ளது.
- சர்வதேச மாணவர்கள் தாம் தகமை பெற வேண்டியப ட்டம் அல்லது சான்றிதழ் கல்வியில் குறைந்தது பாதியையாவது முடித்திருக்க வேண்டும்.
- சர்வதேச மாணவர்கள் தமது தகமைபெறும் பட்டம் அல்லது சான்றிதழ்க் கல்வியின் இறுதித் தவணையிலோ அல்லது பட்டம் பெற்ற இரண்டு வருட காலம் வரையும் விண்ணப்பிக்கலாம்.
- சர்வதேச மாணவர்களுக்கு தொழில் அனுபவம் வேண்டும் என்ற கோரிக்கை இல்லை.
- பொது வகையறாவைப் போலவே, சர்வதேச மாணவர்களுக்கும், நடத்துனரியல், தொழில் தேர்ச்சி மற்றும் தகமை பெற்ற தொழில்துறை பதவிகளுக்கான நிரந்தர முழு-நேர வேலை வாய்ப்பு இருக்க வேண்டும்.

## வேலைவழங்குவோருக்கான தகுதி அலகு:

நியமனதாரர் பதவிகளுக்குத் தகுதியடைய உங்கள் நிறுவனத்திற்குப் பின்வருவன வேண்டும்:

1. பதிவுசெய்யப்பட்ட வியாபாரம் குறைந்தது 3 வருடங்களாவது தொடர்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் இயங்கி இருக்க வேண்டும்.

2. எதிர்கால நியமனதாரர் தொழில் புரியும் நிர்வாகத் தளம் ஒன்டேரியோவில் இருக்க வேண்டும்.
3. டொரண்டோ பெரும் பகுதியில் (GTA) உள்ள ஸ்தாபனங்களுக்கு முந்திய வரி ஆண்டில் குறைந்தது $1,000,000 மொத்த வருமானம் இருந்திருக்க வேண்டும்; அல்லது GTA க்கு வெளியே அமைந்துள்ள ஸ்தானங்களுக்கு குறைந்த பட்சம் $500,000 மொத்த வருமானம் முந்திய வரி ஆண்டில் இருந்திருக்க வேண்டும்; அத்துடன்
4. GTA இல் உள்ள ஸ்தாபனங்கள் குறைந்தது 5 நிரந்தர முழு-நேர ஊழியர்களை உடையவையாகவும், GTA க்கு வெளியே உள்ள ஸ்தாபனங்கள் குறைந்தது 3 நிரந்தர முழு-நேர ஊழியர்களை உடையவையாகவும் இருத்தல் வேண்டும்.

ஒரு முழு-நேர வேலையானது 12 மாத காலத்தில் 1,560 மணித்தியாலங்கள் ஊதியத்துடன் கூடிய வேலையாகும். பின்வருவன 12 மாத காலத்தில் நீங்கள் 1560 மணித்தியாலங்கள் வேலை செய்தாலும் முழு-நேர வேலையாகக் கருதப்படாது:

- காலத்துக்குக் காலம், சுழற்சி முறை அல்லது பகுதி-நேர வேலைகள், எத்தனை மணி நேரம் வேலை செய்யப்பட்டது என்றாலும்,
- உப-ஒப்பந்ததாரர் அல்லது பிரதிநிதித்துவ ஊழியர்கள்,
- நிறுவன ஸ்தானத்தில் வேலை பார்க்காதவர்கள், அதாவது வீட்டில் இருந்த வண்ணமே வேலை செய்பவர்கள், அல்லது வேறு இடங்களில் இருந்த வண்ணம் வேலைவழங்குவோருக்கு தொலைத்தொடர்பு மூலம் ஊழியம் செய்பவர்கள்.

## விண்ணப்பச் செயற்தொடர்:

விண்ணப்பச் செயற்தொடரானது இரண்டு படிமுறைகளைக் கொண்டது: விண்ணப்ப முற்தரப்படுத்தல் (வேலைவழங்குவோருக்கு மட்டுமே), மறறும் நியமனதாரர் விண்ணப்பம் (தனிநபர்களுக்கு மட்டும்).

## படிமுறை ஒன்று- விண்ணப்ப முற்தரப்படுத்துதல்:

- "ஒன்டேரியோ வாய்ப்புக்கள்" இற்கு வேலைவழங்குவோர் **முற்தரப்படுத்துதல் விண்ணப்பங்களை** அனுப்பத் தொடங்குதல்.
- வேலைவழங்கும் விண்ணப்பதாரர் தமது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இயலுமான வரை வேளைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
- "ஒன்டேரியோ வாய்ப்புக்கள்" முற்தரப்படுத்தல் விண்ணப்பங்களை தபால் மூலம், சேவகன் (கொரியர்) மூலம் அல்லது தனிப்பட்ட நேரடி விநியோகம் மூலமும் மட்டுமே ஏற்றுக் கொள்ளும்.
- "ஒன்டேரியோ வய்ப்புக்கள்" தமது முடிவு பற்றி எழுத்து மூலம் சகல வேலைவழங்கு விண்ணப்பதாரருக்கும் அறிவிக்கும். செயற்தொடருக்கான எங்கள் குறிக்கோள், சம்பூரணமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று 90 நாட்களாகும்.
- முதலீட்டாளர்கள் **முற்தரப்படுத்துதல் விண்ணப்பங்களை** "ஒன்டேரியோ வாய்ப்புக்கள்" இற்கு அனுப்பக்கூடாது. தகுதி பெற, முதலீட்டாளர் ஒரு ஒன்டேரியோ அரச அமைச்சிடம் சம்மதக்குறிப்புப் பெற வேண்டும். மேலும் விபரங்களுக்குத் தயவு செய்து www.OntarioImmigration.ca என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

## படிமுறை இரண்டு- நியமனதாரர் விண்ணப்பம்:

- "ஒன்டேரியோ வாய்ப்புக்கள்" இற்கு நீங்கள் விண்ணப்பிக்கத் திட்டமிட்டால், www.OntarioImmigration.ca என்ற இணையத்தளத்தில் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்வது எப்படி என்ற குறிப்பான விபரங்களையும், தகவல்களையும் பெறலாம். இங்கு பொதுவான தகவல்கள் மட்டுமே தரப்பட்டுள்ளன.
- உங்கள் வேலைவழங்குவோர் படிமுறை ஒன்றை பூர்த்திசெய்து நியமனப் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்டபின், "ஒன்டேரியோ வாய்ப்புக்கள" அனுப்பிய நியமனதாரர் விண்ணப்பக் கோவையை உங்களுக்குத் தந்த பின்பே நீங்கள் நியமனதாரராக விண்ணப்பிக்கலாம்.
- சகல எதிர்கால நியமனதாரரும், எந்த வகையறாவானாலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பக் கோவையை "ஒன்டேரியோ வாய்ப்புக்கள்" பரிசீலனைக்காக சமர்ப்பிக்க வேண்டும்.
- "ஒன்டேரியோ வாய்ப்புக்கள்" சகல எதிர்கால நியமன விண்ணப்பதாரருக்கும் எழுத்து மூலம் தமது முடிவை அறிவிக்கும். எமது செயற்தொடர் கருமத்துக்குக் குறிக்கப்பட்ட காலவரையறை, சம்பூரணமான விண்ணப்பம் கிடைக்கப்பட்டதிலிருந்து 90 நாட்களாகும்.
- வெற்றிபெற்ற நியமனதாரர்கள் நியமனம் செய்யப்பட்ட 6 மாத காலத்திற்குள் கனேடிய பிரஜாவுரிமை சக குடிவரவு (CIC) இற்கு நிரந்தர வதிவுரிமை அந்தஸ்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.
- மாகாண நியமனம் மட்டும் கனடாவில் சட்டபூர்வமான அந்தஸ்தைப் பிரதிநிதித்துவப் படுத்தாது. நியமனதாரருக்கு நிரந்தர வதிவுரிமை அந்தஸ்து கிடைக்கும் வரை கனடாவில் இருப்பதற்கு ஒழுங்கான சட்ட அனுமதி வேண்டும்.
- ஒன்டேரியாவினால் நியமனமான தனிநபர்கள் CIC இன் கோரிக்கைகளை, விண்ணப்பதாரர் மற்றும் அவர் சார்ந்த சகல குடும்ப அங்கத்தினரும், மருத்துவ மற்றும் பின்னணித் தேடுதல்கள் உட்படத் திருப்திப்படுத்த வேண்டும்.
- CIC இன் செயற்தொடர் முற்சலுகை, மாகாண நியமனதாரருக்குக் கிடைக்கும்.
- வெற்றிகரமான மாகாண நியமனமானது, குடிவரவு வகுப்பின் கீழான தெரிவு அம்சத்தைப் பிரநிதித்துவப்படுத்தும். உதாரணமாக தகமை-ஊழியர் வகுப்பு, மற்றும் குடும்ப வகுப்பு போன்றவை.
- "ஒன்டேரியோ வாய்ப்புக்கள்" நியமனதாரர் தேவைப்படும் இடங்களில் வேலை அனுமதிப்பத்திரங்களுக்கு ஆதரவளிக்கிறது. CIC வேலை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குப் பொறுப்பாக இருப்பதோடு விண்ணப்பதாரர் தமது நிலைக்குரிய வேலை விண்ணப்பத் தேவைகளைச் சரிபார்க்கவும் உற்சாகப் படுத்துகிறது. வழங்கப்பட்டால், CIC ஆனது நிரந்தர வதிவுரிமை விண்ணப்பத்தை செயற்தொடர் செய்து பூர்த்தி செய்யும் வரை வேலை அனுமதிப்பத்திரமானது நியமனதாரர் ஒன்டேரியோவிற்கு வந்து தனது வேலைவழங்குபவரிடம் வேலை செய்யத் தொடங்க அனுமதிக்கும்.

## எப்படி எம்முடன் தொடர்பு கொள்ளுவது:

"ஒன்டேரியோ வாய்ப்புக்கள்" பற்றிய மேலும் தொடர்புகளுக்கு, விரிவான தொடர்பு விபரங்கள் உட்பட, தகுதி அலகு, விண்ணப்ப விபரமும் திட்டம் பற்றிய பொதுக் கேள்விகளுக்கும், தயவுசெய்து எங்கள் பின்வரும் இணையத்தளத்தைப் பார்வையிடவும்:
www.OntarioImmigration.ca